# மாகாணக் கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## Provincial Department of Education, Northern Province

### கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) மூன்றாம் தவணைப் பரீட்சை – 2022 (2023)
### General Certificate of Education (Ord.Level) Third Term Examination- 2022 (2023)

| நேரம்: 3.00மணித்தியாலங்கள் | தமிழ் இலக்கியநயம் - I, II<br>Tmil literature- I, II | பாட எண் : 48 T I, II |
|---|---|---|
| பெயர் / சுட்டெண் ............................................................... | | |

மேலதிக வாசிப்பு நேரம்: 10 நிமிடங்கள்

**கவனிக்க:**
- வினாத்தாள் 1 இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் இவ் வினாத்தாளிலேயே விடை எழுதி வேறாகக் கைகளிக்கவும்.

LMDMUnit

## பகுதி –I

**01. (i) தொடக்கம் (v) வரையுள்ள வினாக்களுக்குச் சுருக்கமான விடை எழுதுக.**

(i) “ஏர் குலாம் முகத்தினாளை இறைமுகம் எடுத்து நோக்கி தார்குலாம் அலங்கல் மார்பன் தாயரை நினைந்து நைந்தான்”

அ. தாயர் எனப்படுவோர் யாவர்?

.....................................................................................................................................

ஆ. ஏர் குலாம் முகத்தினாள் என சுட்டப்படுபவர் யார்?

.....................................................................................................................................

(ii) “எலி பாஷணம் வாங்க மருந்து கடைக்குச் சென்ற போது கடைக்காரன் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தான்”

1. எலிப்பாஷணம் வாங்க சிபாரிசு செய்தவர் யார்?

.....................................................................................................................................

2. கடைக்காரன் அவனை ஒரு மாதிரியாகப் பார்த்தது ஏன்?

.....................................................................................................................................

(iii) “காமர் மாலை அருகசைய நடந்த எல்லாம் நின் கணவன் நாம வேலின் திறங்கண்டேஅறிந்தேன் வாழி காவேரி”

1 . கணவன் என குறிப்பிடப்படுபவர் யார்?

.....................................................................................................................................

2. காவேரியின் சிறப்புக்கான காரணம் யாது?

.....................................................................................................................................

(iv) “ஹைக்கூ என்பது சிந்தனை எனும் ஜலப் பரப்பில் எறியப்படும் சிறிய கல் போன்றது என்கிறார் சுஜாதா”

1. ஹைக்கூ கவிதையின் சிறப்பிடம் யாது?

.................................................................................................................................................

2. இதில் உள்ள அணி யாது? விளக்குக.

.................................................................................................................................................

(v) “மண்திணி கிடக்கைத் தண்டமிழ்க் கிழவர் முரசு முழங்கு தானை மூவர்”

1. மூவர் எனப்படுவோர் யாவர்?

.................................................................................................................................................

2. இப் பாடல் வரிகள் இடம்பெறும் நூல் எது?

.................................................................................................................................................

(5 x 4 = 20 புள்ளிகள்)

**02. கீழ்க்காணும் உரைப்பகுதியை அல்லது செய்யுட் பகுதியை வாசித்துத் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை எழுதுக.**

ஐயை - கொங்கையாற் கூடற்பதி சிதைந்து
கோவேந்தைச் செஞ்சிலம்பால் வென்றாளைப்
பாடுதும் வம்மெல்லாம் என்று ஆடல் மகளிர் பாடவும் ஆடவும்
கொங்கச் செல்வி, குடமலையாட்டி
தென்றமிழ்ப்பாவை, செய்தவக்கொழுந்து
ஒரு மாமணியாய் உலகில் தோன்றிய திருமாமணி என
சேர மன்னன் எக்காளம் முழங்கவும்
தலைமைப் பூசகன் சிலம்பை உலுக்கி வாழி வாழியென
வாழ்த்தொலி செய்யவும் எனக்கு உடல் சிலிர்த்தது. மயிர்க்கால்கள்
நிமிர்ந்தன. பலருக்கும் மருள் வந்தது. ஆனால் நீங்களிருவரும்
மரம் போல் நின்றிருந்தீர். உங்கள் கண்களிலிருந்து நீர்
உருண்டோடியதை நான் பார்த்தேன்.

காவற்பெண்டு - கண்ணகி என் வயிற்றில் உதிக்காவிட்டாலும், அவள் என் மகள், என் மடியில் தவழ்ந்தவள். அவளை எப்படியடி நான் தெய்வமாய் வணங்க முடியும்? தெய்வக் கோலம் என் கண்ணகியை, என் கண்களிலிருந்து பறித்துக் கொள்கிறது. அந்தக் கோலத்தின் பின்னாலே, மமதை வழிந்தோட, கோவலர்கள் சிரித்துக் கொண்டிருப்பதை நான் பார்க்கிறேன். முடியுடை வேந்தர்கள் அவர்களுக்கு வெண்சாமரம் வீசுவதைப் பார்க்கிறேன். சிலம்பின் வென்ற சேயிழை என்றார்களே, சிலம்பு தெரியுமா? அந்தச் சேயிழையைத்தான் தெரியுமா? எனக்குத் தெரியுமடி.... எனக்குத் தெரியும். அவர்களுக்கு சிலம்பு.... அந்தப் பாழாய்ப் போன சிலம்பை என் கரங்களால் தானே அவளுக்கு அணிவித்தேன். கண்ணகிக்குப் பன்னிரண்டு வயதிருக்கும், திருமணத்திற்கும் நாள் குறித்தாகிவிட்டது.

(i) கொங்கையால் கூடல் பதி சிதைத்தவர் யார்? காரணம் என்ன?

.................................................................................................................................................

.................................................................................................................................................

.................................................................................................................................................

(4 புள்ளிகள்)

(ii) மமதை வழிந்தோட கோவலர்கள் சிரித்துக் கொண்டிருக்கிறார்கள் என்று காவற்பெண்டு கூறுவது எதனை உணர்த்துகின்றது?

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

(4 புள்ளிகள்)

(iii) கண்ணகியைத் தன்னால் தெய்வமாக வணங்க முடியாது என்பதற்கு காவற்பெண்டு கூறுகின்ற காரணம் யாது?

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

(6 புள்ளிகள்)

(iv) இப் பகுதியில் பலருக்கும் மருள் ஏற்படுவதற்குக் காரணமாக கூறப்பட்ட விடயங்கள் யாவை?

............................................................................................................................................

............................................................................................................................................

............................................................................................................................................

(6 புள்ளிகள்)

அல்லது

வேப்பம்பூ மிதக்கும்
எங்கள் வீட்டு கிணற்றில்
தூர் வாரும் உற்சவம்
வருடத்திற்கொரு முறை
விசேஷமாய் நடக்கும்

ஆழ் நீருக்குள்
அப்பா முங்க முங்க
அதிசயங்கள் மேலே வரும்
கொட்டாங்குச்சி, கோலி,
கரண்டி கட்டையோடு உள் விழுந்த
துருப்பிடித்த ராட்டினம்
வேலைக்காரி திருடியதாய்
சந்தேகப்பட்ட வெள்ளி டம்ளர்
சேற்றிற்குள் கிளறி
எடுப்போம் நிறையவே

சேறும் சேறுடா வென
அம்மா அதட்டுவாள்
என்றாலும்
சந்தோஷம் கலைக்க
யாருக்கு மனம் வரும்?

பகை வென்ற வீரனாய்
தலைநீர் சொட்டச் சொட்ட
அப்பா மேல் வருவார்
இன்றுவரை அம்மா
கதவின் பின்னிருந்து தான்
அப்பாவோடு பேசுகிறாள்

கடைசிவரை அப்பாவும்
மறந்தே போனார்
மனசுக்குள் தூரெடுக்க

(i) தூர்வாரும் நிகழ்வு உற்சவம் எனக் கூறப்படுவதற்கான காரணம் யாது?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

(4 புள்ளிகள்)

(ii) வேலைக்காரி பற்றிய மனப்பதிவு யாது? அது எவ்வாறு உடைக்கப்படுகிறது?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

(4 புள்ளிகள்)

(iii) இக்கவிதையில் ஆணாதிக்கத் தனம் எவ்வாறு வெளிப்படுத்தப்பட்டுள்ளது?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

(6 புள்ளிகள்)

(iv) கவிதைக்கும் தலைப்புக்கும் இடையிலான தொடர்பு யாது?

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

.....................................................................................................................................

(6 புள்ளிகள்)

LMDMUnit

## பகுதி - II

**கவனிக்க:**

- ❖ **வினாத்தாள் II இல் 1ஆம் வினாவுக்கும் 2,3,4,5 ஆகிய வினாக்களுள் எவையேனும் 2 வினாக்களுக்குமாக மொத்தம் 3 வினாக்களுக்கு மாத்திரம் விடையளிக்குக.**
- ❖ **இவ்வினாத்தாளுக்கு விடையளிப்பதற்கு விடை எழுதும் தாளைப் பயன்படுத்துக.**

**01. பின்வரும் கவிதைப் பகுதியை வாசித்து, அதன் கீழ்த் தரப்பட்டுள்ள வழிகாட்டற் குறிப்புக்களின் அடிப்படையில் கவிதையை நயந்து குறைந்தபட்சம் 200 சொற்களில் எழுதுக.**

ஆர்க்கும் நூபுரங்கள் பேரி, அல்குலாம் தடந்தேர் சுற்ற,
வேற்கண் விற்புருவம் போர்ப்ப, மடந்தையர் மிடைந்த போது
பேர்க்க அரும சீற்றம் பேர, முகம் பெயர்த்து ஒதுங்கிற்றல்லால்
பார்க்கவும் அஞ்சினான், அப்பருவரை அனைய தோளான்.

தாமரை வதனம் சாய்த்து,
தனு நெடுந் தரையின் ஊன்றி
மாமியர் குழுவில் வந்தானாம்
என, மைந்தன் நிற்ப
பூமியில் அணங்கு அனார்தம்
பொது விடைப்புகுந்து, பொன்தோள்
தூ மன நெடுங்கண் தாரை,
நடுங்குவாள், இனைய சொன்னாள்.

“அந்தம்இல் காலம் நோற்ற
ஆற்றல் உண்டாயின் அன்றி,
இந்திரன் முதலினோர்க்கும்
எய்தலாம் இயல்பிற்றாமோ?
மைந்த! நின்பாதம் கொண்டு,
எம் மனை வரப்பெற்று வாழ்ந்தோம்
உயந்தனம் வினையும் தீர்ந்தேம்
உறுதி வேறு இதனின் உண்டோ?”

“வெய்தின் நீ வருதல் நோக்கி வெருவி நின் சேனைவீரர்
செய்திதான் உணர்கிலாது, “திருஉளம் தெரித்தி” என்றார்
ஐய! நீ ஆழி வேந்தன் அடியிணை பிரிகிலாதாய்,
எய்தியது என்னை?” என்றாள், இசையினும் இனிய சொல்லாள்.

அ. இச் செய்யுள் பகுதி இடம் பெறும் சூழ்நிலையும் சந்தர்ப்பமும்.
ஆ. இலக்குமணனின் கூச்ச சுபாவம் வெளிப்படும் விதம்.
இ. தாரையின் புத்திக் கூர்மை.
ஈ. வானரப் பெண்களின் அழகு வெளிப்படுத்தப்பட்ட விதம்.
உ. அணிச் சிறப்புகள்.

(30 புள்ளிகள்)

**02. நலம்புனைந்துரைத்தல் என்ற அதிகாரத்தில்**

அ) தலைவியின் முக அழகு வெளிப்படுத்தப்பட்ட விதம்
ஆ) இதில் இடம் பெற்றுள்ள சிறப்புகள்
என்பனவற்றை விளக்குக. (15 புள்ளிகள்)

LMDUnit

**03. எலியம் சிறுகதையை அடிப்படையாகக் கொண்டு,**

அ) சிறுகதையில் அங்கதச்சுவை வெளிப்படுத்தப்பட்ட விதம்

ஆ) சிறுகதையின் மொழியாட்சி
என்பன பற்றித் தெளிவுபடுத்துக. (15 புள்ளிகள்)

**04. பெருமரம் ஆகிப்போனதொரு வாழ்வு என்ற கட்டுரையில்,**

அ) பாலுமகேந்திராவின் ஒளிப்பதிவு தொடர்பான சிறப்பம்சங்கள்

ஆ) கதாபாத்திரங்களின் தேர்வு
ஆகிய விடயங்களை ஆராய்க.

(15 புள்ளிகள்)

**05.** அ) பண்டைத் தமிழர்களின் புகழ் மீதான விருப்பு

ஆ) பேரரசர்களுக்கும் சிற்றரசர்களுக்கும் இடையிலான வேறுபாடு

ஆகிய விடயங்களை புகழ் வேட்டை என்ற கட்டுரையை அடிப்படையாகக் கொண்டு விபரிக்குக.

(15 புள்ளிகள்)

LMDMUnit